# இந்திய சிறப்பு ஒலிம்பிக் மருத்துவர் குழுத் தலைவராக பாலாஜி மருத்துவமனை டாக்டர் கார்த்திகேயன் தேர்வு



சென்னை,ஜூலை 9–

சென்னை குரோம்பேட்டை ஸ்ரீபாலாஜி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் விளையாட்டு மற்றும் மாற்றுத்திறன் மேம்பாடு மருத்துவத்துறைத் தலைவராக பணியாற்றி வரும் டாக்டர் ஆர். கார்த்திகேயன், ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் குளிர்கால உலக மாற்றுத்திறனாளர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் இளைஞர்களுக்கான மருத்துவக் குழுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த தகவலை இந்திய சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டு தேசிய இயக்குநர் முக்தா நாராயண் திண்ட் அறிவித்துள்ளார்.

இதன் மூலம் நமக்கு பெருமை சேர்த்து இருக்கும் டாக்டர் ஆர். கார்த்திகேயனை குரோம்பேட்டை ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் டி.ஆர்.குணசேகரன், கல்லூரி முதல்வர் ஜான்சன், மருத்துவமனை தலைவர் டாக்டர் ஸ்ரீ நிஷா இளமாறன், நிர்வாக இயக்குநர் பொறியாளர் என். இளமாறன் ஆகியோர் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

இது குறித்து டாக்டர் ஆர். கார்த்திகேயன் செய்தியாளர்களிடம் பேசுகையில், வரும் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச குளிர்கால பனிச்சறுக்கு உள்ளிட்ட ஸ்கேட்டிங் விளையாட்டுகள் ரஷ்யாவில் காசின் நகரில் ஜனவரி 22 முதல் 28 வரை நடைபெற உள்ளது. இதில் 49 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர். அவர்களுக்கான மருத்துவர் குழுத் தலைவராக செல்கிறேன் என்றார்.

விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு மருத்துவ துறையில் மிகுந்த அனுபவம் மிக்க டாக்டர் கார்த்திகேயன், சென்னை முட்டுக்காடு பன்திறன் குறைபாடுடையோர் மேம்பாடு மையத்தில் கௌரவ பகுதி நேர சிகிச்சை மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். மேலும் திருவண்ணா மலையில் மாற்றுத்திறனாளி சமூக சேவகி ப்ரீதி ஸ்ரீனிவாசன் தலைமையில் செயல்பட்டு வரும் மாற்றுத் திறனாளிகள், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கான சிறப்பு சிகிச்சை மையம் ஸோல்ப்ரி புனர்வாழ்வு மருத்துவமையத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும், மருத்துவராக ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார்.